[20th January 1964

மீதியை அரசாங்கமே போட்டுக்கொள்வது, இரண்டையும் சேர்த்து கடன் வாங்குவது என்ற முறையில் விதிகளை அமைத்து கூட்டுறவுத் துறையை வலுப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கூட்டுறவுத் துறை என்று சொல்லிவிட்டு பங்குகள் சேர்க்காமல் இருந்தால் அது என்ன கூட்டுறவு என்று தெரியவில்லை. சர்க்காரே போட்டு செய்வதாக இருந்தால், சர்க்கார் துறையிலேயே மில் வைத்து விடுகிறார்கள். அதற்கு கூட்டுறவுத் துறை என்று இருக்கவேண்டாம்.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், ஏராளமாக நூல் ஆலைகளை ஏற்படுத்தி அதிகமாக நூலை நாம் சேர்த்து வைத்து அதனால் ஏராளமாக ஸ்டாக் நின்றுவிட்டால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய என்னென்ன வழிகள் கையாளப்பட்டு வருகின்றன? தாராளமாக எக்ஸ்போர்ட் செய்ய வழி முறைகளை ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எக்ஸ்போர்ட்டுக்கு கோட்டா தேவையில்லை. யார் வேண்டுமானாலும் எவ்வளவு வேண்டுமானாலும் ஏற்றுமதி செய்யலாம். இன்றைக்கு நாட்டில் இருக்கும் நிலைமை நூல் பற்றுக்குறை தான். இந்தப் பிரச்னை எழுவேயில்லை.

திரு. கரு. சிமைச்சாமி: கூட்டுறவு முறையில் ஷேர் காப்பிட்டல் சேர்க்க முடியவில்லையென்றால் தனியார் துறையில் யாராவது மனுச் செய்தால் அவர்களுக்குச் சலுகை காட்ட முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: எல்லா ஜில்லாவிற்கும் நாங்கள் ஒவ்வொரு கூட்டுறவு மில் கொடுத்தாகி விட்டது. மேற்கொண்டு அவர்கள் கூட்டுறவுத் துறையில் பங்கு சேர்த்தால் அதையும் கவனிக்கத் தயாராக இருக்கிறோம்.

Post-Graduate Course in Dental Surgery

* 45 *Q.*—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to start Post-Graduate Dental Education Course with the assistance of the Central Government?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

அரசாங்க போக்குவரத்து பஸ்கள்

* 46 கேள்வி—திரு. எம். எஸ். மணி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

அரசாங்க பஸ்களில் தினசரி மொத்த வசூலாகும் தொகைக்கும் தினசரி டிக்கட் விற்பனை ஆகும் தொகைக்கும் வித்தியாசம் இருக்கிறதென்பது உண்மையா?

20th January 1964]

THE HON. SRI R. VENKATARAMAN : There is difference between the value of tickets sold and cash actually collected daily from the buses for the following reasons :—

(*a*) The traffic crew are permitted to take batta from out of the collections.

(*b*) personnel of Police Departments are permitted to give bus warrants in lieu of cash.

(*c*) Certain departmental expenditure like charges on account of trunkcalls, fees for bus stands, etc., are permitted to be incurred out of the collections on long distance and mofussil services.

(*d*) There may be shortage or excess in amounts remitted by the conductors. Occasionally, charges due to passengers may be remitted as excess at the depots.

திரு. இராம. அரங்கண்ணல் : ஸார், ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் ஷார்ட்டேஜ் வந்தால்கூட, கண்டக்டர்கள் உடனடியாக டிஸ்மிஸ் செய்யப்படுகிற வழக்கம் நம் டிரான்ஸ்போர்ட்டில் இருக்கிறது. அந்த கண்டக்டர்கள் அப்பீல் செய்ய வேண்டுமென்றால் இங்கே அமைச்சர்களுக்குத்தான் அப்பீல் செய்ய வேண்டியிருக்கிறது. அப்படிக்கில்லாமல் விதிகள் தளர்த்தப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஒரு ரூபாய் ஷார்ட்டேஜ் இருந்தால் டிஸ்மிஸ் செய்வதில்லை. மினிஸ்டருக்கும் அப்பீல் செய்ய வேண்டியதில்லை. இதற்கு ப்ரொஸிஜர் இருக்கிறது. முதலில் என்க்வொயரி நடத்துகிறார்கள். என்க்வொயரி நடத்தி பனிஷ்மெண்ட் கொடுத்த பிறகு டைரக்டருக்கு அப்பீல் போடலாம். டைரக்டருக்கு அப்பீல் போட்டு அதில் சாதகம் ஆகவில்லையென்றால் மந்திரியிடம்—கவர்ண்மெண்ட்டிடம் அப்பீல் போடவேண்டும்.

திருமதி டி. என். அனந்தநாயகி : ஸார், அதே இலாகாவில் சிலர் திருட்டுத்தனமாக டிக்கட் போட்டு விற்று, நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று கூறினார்களே அதில் ஏதாவது ஆதாரம் உண்டா ? நடவடிக்கை ஏதாவது எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அது மிகப் பழைய கதை—6-7 ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, கண்டக்டர்கள் தினசரி வசூலைச் கொண்டு வந்து கொடுக்கும்போது சரிபார்த்து பணத்தை வாங்கிக்கொள்ள போதுமான ஆட்கள் இல்லாததால் பெயரை எழுதி பணத்தை பொட்டணமாகக் கட்டி வைத்துப் போகிறார்கள். பிறகு பணம் எண்ணப்படும்போது குறைவாக இருக்கிறது என்று அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே இந்தக் குறை போக்கப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது ஒரு அட்மினிஸ்ட்ரேட்டிவ் மாட்டர். இதைப் பற்றிக் கடிதம் எழுதினால் இலாகாவிற்கு அனுப்பி பரிசிலனை செய்யச் சொல்லலாம்.